வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ఈళనాడు



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    14.10.2024 திங்கட்கிழமை    இதழ் : 287    பக்கங்கள் : 12

### இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை:

# வரும் 29ஆம் திகதி கொழும்பில் பேச்சு!

கொழும்பு, ஒக்ரோபர் 14

**இலங்கை - இந்திய மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பில் எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் விசேட பேச்சு நடைபெறவுள்ளது. இரு நாடுகளினதும் கடற்றொழில் அமைச்சுகள் இந்தப் பேச்சில் பங்கேற்கவுள்ளன என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கரின் அண்மைய இலங்கை பயணத்தின் போதும் மீனவர் பிரச்னை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. இதன்போது, இந்திய மீனவர்கள் இழுவை மடியை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல், இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித்தல் போன்றவற்றால் இலங்கை 11

# அரசியலில் 'ஓய்வு' என்பதை அறிமுகம் செய்தோர் நாமே!

### ஜனாதிபதி அநுரகுமார பெருமிதம்

கொழும்பு, ஒக். 14

இலங்கை அரசியலில் ஓய்வு என்ற வார்த்தையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்த முடிந்துள்ளது. கடந்த காலங்களில் தேர்தலில் தோல்வியடைந்த அல்லது உயிரிழந்த அரசியல்வாதிகளை தவிர பிறர் எவரும் ஓய்வு பெறவில்லை - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியில் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "முன்னாள்



எம். பிக்களில் பெரும்பாலானோர் இம்முறை தேர்தல் பிரசாரத்தில் இருந்து ஒதுங்கியுள்ளனர். மக்கள் எதிர்பார்த்த 11

# போலி தமிழ் தேசியவாதிகளை மக்கள் நிராகரிக்க வேண்டும்!

### ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

போலித் தமிழ்த் தேசியவாதிகளையும் போதைப்பொருள் வியாபாரிகளையும் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை 11

# உள்நாட்டு பொறிமுறையில் பொறுப்புக்கூறலுக்கு தீர்வு!

### *3 குழுக்களை அமைக்க அரசு திட்டம்!*

கொழும்பு, ஒக். 14

உள்நாட்டு பொறிமுறை மூலம் பொறுப்புக்கூறலுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கமைய, நல்லிணக்க செயல்பாடுகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், நிதி குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அரசாங்கம் மூன்று உயர்மட்ட குழுக்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இந்த உயர்மட்டக் குழுக்களை பொதுத்தேர்தலுக்கு முன்னதாக அரசாங்கம் அமைக்கவுள்ளது. ஒழுக்காற்று அடிப்படையிலான ஆட்சி, ஊழல், வீண்விரயம் போன்றவற்றுக்கு தீர்வு காணல் போன்ற ஜனாதிபதியின் தேர்தல் கால வாக்குறுதிகளை 11

## கெஹலியவும் தற்காலிக ஓய்வு

கொழும்பு, ஒக். 14

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தீவிர அரசியலிலிருந்து தற்காலிகமாக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தனது எதிர்கால அரசியல் பயணம் தொடர்பில் கண்டியில் தனது ஆதரவாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 11

# வெடிபொருள் வெடித்து இளைஞன் படுகாயம்!

### பளையில் நேற்று துயரம்

கிளிநொச்சி, ஒக். 14

மண்ணில் புதையுண்டிருந்த வெடிபொருளை இழுத்து எடுத்தபோது, அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி - பளை - அரசங்கேணி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியமளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 19 வயது இளைஞரே படுகாயமடைந்தார்.

அந்தப் பகுதியில் தனக்கு சொந்தமான வயலில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்தவரே இந்த வெடிவிபத்தில் படுகாயமடைந்தார்.

இதில், படுகாயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 100,000 பேரில் 1,990 பேருக்கு வாய்ப்புற்று நோய் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 14

நாட்டின் மக்கள் தொகையில் ஒரு இலட்சம் பேரில் 1,990 பேர் என்ற அளவில் வாய்ப்புற்று நோயால் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன், மார்பக புற்றுநோயாளர்களின் எண்ணிக்கையும் நாட்டில் அதிகரித்து வருகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த வருடம் புற்றுநோயால் 33 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்படுகின்றனர். 19 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 11

# வடக்கு, கிழக்கில் பரவலாக இன்று முதல் கனமழை!

கொழும்பு, ஒக். 14

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் கன மழை கிடைக்கத் தொடங்கும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இந்த மழை தொடரும் என்று புவியியல்துறை தலைவர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

தாழமுக்கம் காரணமாக கடற் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் 11

# சீரற்ற காலநிலையால் இருவர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஒக். 14

சீரற்ற காலநிலையால் இருவர் உயிரிழந்தனர். அத்துடன், இருவர் காயமடைந்துள்ளனர் என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

அத்துடன், சீரற்ற காலநிலையால் கிளிநொச்சி தவிர்ந்த 10 மாவட்டங்கள் தென்னிலங்கையில் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், நாடு முழுவதும் 18 ஆயிரத்து 765 குடும்பங்களை சேர்ந்த 76 ஆயிரத்து 218 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 233 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கம்பஹா மாவட்டமே அதிக பாதிப்பை சந்தித்துள்ளது. இங்கு 68 ஆயிரத்து 672 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 5இல்)

# ஈ.பி.டி.பி. வேட்பாளர்களில் தேரர்கள் இருவருக்கு இடம்!

கொழும்பு, ஒக். 14

ஈ. பி. டி. பி என்று அறியப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் பட்டியலில் தேரர்கள் இருவர் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. இதில், ஈ. பி. டி. பி. வடக்கு, கிழக்கிலும் கொழும்பிலும் போட்டியிடுகிறது. இதில், கொழும்பு மாவட்டத்திலேயே 11




### தமிழ் அரசுக் கட்சியின்

# வேட்பாளர் அறிமுகத்தில் மாவை பங்கேற்கவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பங்கேற்கவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஒரு பெரிய தொழிற்சாலை. கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு மேல் வேலை பார்க்கும் தொழிற்சாலை அது. அங்கு எல்லாம் நல்லபடியாகத்தான் போய்கொண்டிருந்தது!.

ஒருநாள் அந்தத் தொழிற்சாலையின் முதலாளி தொழிற்சாலையை சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்போது ஒரு பையன், "மல்லாக்கப் படுத்துக் கிடந்து கொண்டு முகட்டைப் பார்க்கிறதில என்ன சுகம்...." என்று கூறிக் கொண்டு படுத்துக் கிடந்தான்.

அதைக்கண்ட முதலாளிக்கு படுகோபம்.

அடக்கிக்கொண்டே, அவனை எழுப்பினார், "தம்பி நீ மாதம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறாய்?" என்று கேட்டார். அதுக்கு அவன் ஒன்றும் புரியாமல் முழித்துக் கொண்டே, "மூவாயிரம் ரூபாய் சேர்" என்றான்.

உடனே அவர் பைக்குள் இருந்து பணத்தை எடுத்து பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்து, "இதில உன்ர மூனு மாச சம்பளத்துக்கு மேலே ஒரு ஆயிரம் ரூபாய் அதிகமா இருக்கு, நான் இங்க சும்மா படுத்துக்கிடந்து முகட்டைப் பார்க்கிறதுக்கு சம்பளம் கொடுக்கிறதுக்கு இந்த தொழிற்சாலையை நடத்தயில்லை..." என்றார்.

அவன் ஒரு நிமிடம் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தான். பின்னர் அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு, வெளியே போய் விட்டான். எல்லாரும் வாய டைத்துப் போய் நின்றார்கள்.

அதன் பின்னர் முதலாளி எல்லாரையும் கர்வமா பார்த்து, "இனிமேல் எல்லாம் இப்படித் தான்" என்றார்.

பின்னர் மனேஜரை பார்த்துக் கேட்டார், "யார் அவன்?" என்று.

அதற்கு மனேஜர் சொன்னார், "ரீ கொண்டு வந்த ரீ கடை பையன் சேர்..."

நேற்று அந்தக் கதையைக் கேள்விப்பட்டபோது இந்தக் கதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர், அந்தத் தலைவரிடம் சென்று தானும் தேர்தலில் போட்டியிடுவதாகவும் உங்களைப் போன்ற தலைவர்களிடம் ஆசி பெற்றால்தான் நல்லது என்று அம்மா சொன்னார். அதுதான் வந்தனான் என்றிருக்கிறான் சுயேச்சைக்குழு ஒன்றில் போட்டியிடும் இளைஞன் ஒருவன்.

"உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேணும் எண்டு நான்தான் தம்பி எங்கட தேர்தல் வேட்பாளர் தெரிவுக்குழுவில் வாதாடினான்..." என்றிருக்கிறார் அந்தத் தலைவர்.

அதற்கு அந்த இளைஞன் சொன்னானாம், "இல்லை ஐயா நான் உங்கட கட்சியில போட்டியிடேல்ல. சுயேச்சையாக போட்டியிடுகிறன்" என்று.

நமது அரசியல் இன்னும் இன்னும் இதுபோன்ற எத்தனை "கொமடி" கதைகளை சொல்லப் போகின்றதோ தெரியவில்லை.

இனி இன்று சொல்ல வந்த விடயத்துக்கு வருகிறேன்.

அந்தக் கட்சி தமிழ் மக்களின் அரசியலில் ஒரு காலத்தில் மிக முக்கியமான கட்சியாக இருந்த கட்சி. இரண்டாயிரத்து நான்காம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் ஒரு தலைவர் மாத்திரமே பொதுச் செயலாளராக இருந்துகொண்டு, அந்தக் கட்சியை சொந்தம் கொண்டாடி காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றார்.

கட்சிக்கு அவ்வப்போது ஒரு தலைவரைக் கொண்டுவருவார். சில நாட்களிலேயே அவர் தனது கட்சியை கபளீகரம் செய்யப் பார்க்கிறார் என்று கூறிக்கொண்டு, அவரை கட்சியிலிருந்து வெளியேற்றுவார். உடனே நீக்கப்பட்ட தலைவர் நீதிமன்றம் போவார். கட்சி இப்படியே நீதிமன்றத்திலேயே இருக்கும். கடைசியில் அவரை அப்படியொரு வழக்கிலிருந்து மீட்பதற்காக கட்சியின் பொதுச் சபைக்குள் தனது ஆதரவாளர்களை உள்வாங்கி, நீதிமன்றிலிருந்து கட்சியை மீட்க இளம் தலைவர் ஒருவர் உதவினார். அதனால், அவரே கட்சியின் தலைவராகவும் ஆக முடிந்தது.

இளம் துடிப்புள்ள இளைஞரான அந்தத் தலைவர், ஓர் அரசியல் பாரம்பரியமுள்ள குடும்பத்திலிருந்து வந்தவர்.

அண்மையில் புலம்பெயர் வர்த்தக நிறுவனம் ஒன்று அரசியல் கட்சிகளுடன் 'டீல்' போட்டு வருவதைப் பற்றி எழுதியிருந்தது ஞாபகம் இருக்கலாம். அந்த நிறுவனம் இந்தக் கட்சியையும் வாங்குவதற்காக அந்த மூத்த தலைவருடன் பேசி ஒரு முடிவெடுத்து விட்டதாம். இதனை அறிந்த அதன் தலைவர், பொங்கி எழுந்து அதனைத் தடுத்துக் கட்சியை காப்பாற்றியிருந்தமை தனிக்கதை.

இப்போது அந்த மூத்த தலைவரோ, தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களையெல்லாம் கூவிக்கூவி அழைத்து தனது கட்சியில் போட்டியிடுமாறு கேட்டதுடன், வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல அதற்கு வெளியிலும் போட்டியிட பலருக்கு வேட்புமனுவில் கையெழுத்திட்டிருக்கிறார். வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்றும் அது தனி அரசாக இயங்கவேண்டும் எனவும் தோற்றம்பெற்ற அந்தக் கட்சிக்கு வடக்கு - கிழக்குக்கு வெளியே என்ன வேலை என்று கேட்க வேண்டும் போல இருந்தது.

அதுகூட பரவாயில்லை. ஆனால், இப்படி கட்சியின் சின்னத்தில் போட்டியிட மலையகத்தின் இளம் தலைவர் ஒருவர் வடக்குக்கு வந்து அந்த மூத்த தலைவருடன் 'டீல்' போட்டு முடித்து, ஊடக சந்திப்பு நடத்திய பின்னர்தான், தனது கட்சி மலையகத்தில் போட்டியிடுகின்ற விடயமே கட்சித் தலைவருக்கு தெரியவந்திருக்கின்றது.

இந்த விடயத்தை நண்பர் ஒருவர் என்னிடம் சொல்லிய போது நான் சொன்னேன்: "அவர் இப்படி நாடு முழுக்க வேட்பாளர்கள் போட்டியிட்டால் கட்சிக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைக்கும், அப்படி கிடைத்தால்தான் எம். பி. ஆகலாம் என்று நினைத்தாரோ தெரியவில்லையே" என்றேன்.

அதற்கு அவர் சொன்னார்: "அது நல்ல யோசனைதான். ஆனால், அதற்கு ஒவ்வொரு இடத்திலும் சில ஆயிரங்களாவது எடுக்கக்கூடியவர்களையல்லவா நிறுத்தவேண்டும்."

**- ஊர்க்குருவி.**

# பரிந்துரைகளை நிராகரித்ததால் தலைமை பொறுப்பை துறந்தேன்

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 14

எனது பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் தான் கட்சியின் தலைமைப் பொறுப்பைத் துறந்தேன் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

"எதிர்காலத்தில் கட்சியை ஒன்றுபடுத்தி தமிழ் மக்களின் இலட்சியப் பயணத்துக்கான வலுவான சக்தியாக மாற்றுவதற்காக பணியாற்றவுள்ளேன் என்றும் அவர் கூறினார்.

என்னைப் பொறுத்த வரையில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் கூட நிராகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணத்தாலேயே நான் பதவியில் இருந்து விலகினேன். இருப்பினும் நான் கட்சியின் உறுப்பினராக தொடர்ந்தும் மக்களின் விடுதலைக்கான பயணத்தில் ஈடுபடுவேன்.

அதேநேரம், கட்சியில் இருந்து பலர் வெளியேறி வெவ்வேறு தமிழ்த் தேசிய பாதையில் பயணிக்கின்ற கட்சிகளில் பலர் போட்டியிடுகின்றார்கள். இந்த நிலைமையானது எனக்கு கவலையளிப்பதாக உள்ளது.

இருப்பினும் அவர்கள் அனைவரும் தமிழ்த் தேசியச் சிந்தனையில் உள்ள தளத்தில் பயணிப்பதால் சற்று நிம்மதியாகவுள்ளது.

எவ்வாறாயினும் இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று வேறாகப் போட்டியிடுகின்றவர்கள், கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் என்று அனைவரையும் ஒன்றிணைக்கின்ற பயணியை நான் தேர்தலின் பின்னர் முன்னெடுக்கவுள்ளேன்"- என்றார். (எ)

# மென்பந்து துடுப்பாட்ட அரையிறுதி போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 14

தென்மராட்சி லவ்லி கிண்ணம் - 2024 மென்பந்து துடுப்பாட்ட தொடரின் அரையிறுதிப் போட்டிகள் நேற்றுக் காலை மட்டுவில் வளர்மதி மைதானத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

இதில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணியும் ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பின் தலைவருமான கே. வி. தவராசா கலந்து கொண்டார்.

அத்தோடு, ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அகிலன் முத்துக்குமார சுவாமி, தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் இளைஞர் அணிச் செயலாளர் கருணாகரன் குணாளன், தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் மகளிர் அணிச் செயலாளர் திருமதி விமலேஸ்வரி சிறிகாந்தரூபன் மற்றும் வேலணை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் கருணாகரன் நாவலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-05)

# சர்வதேச கலை பரிமாற்று நிகழ்வு





சங்கானை, ஒக். 14

காவேரி கலா மன்றம், கற்பகம் இயற்கை நேய செயலணி இளையோர் நாடகக் குழு என்பன இணைந்து இரண்டு நாள் பயிற்சி செயலமர்வை கடந்த 11, 12 ஆகிய திகதிகளில் சங்கானை பொது நூலகத்தில் நடத்தினர்.

இதன் இறுதி அரங்கேற்றத்தை நேற்று முன்தினம் சுழிபுரம் பெரிய புலோ அண்ணா கலையரங்கில் நிகழ்த்தினர்.

இதன்போது பறை இசை ஆட்டம், நாட்டார் பாடல்கள், உடன் நாடக அரங்கு என்பன நிகழ்த்தி மக்களை மகிழ்வூட்டினர். குறிப்பாக உடன் நாடக அரங்கினை நடித்தோர் பார்வையாளர்களின் பாராட்டினை பெற்றனர்.

சர்வதேச கலை பரிமாற்று நிகழ்வு என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த கலைநிகழ்வை, தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த கலைஞர்கள் பயிற்றுவித்தமை குறிப்பிடத்தக்கது. (எ-05)

# வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு கருவி நிறுவனத்தால் விழிப்பூட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.14

ஒக்ரோபர் 15ஆம் திகதி சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம். அதனை முன்னிட்டு கருவி நிறுவனத்தினர் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வெள்ளைப்பிரம்பு தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தி பார் வையற்றோர் வாழ்வை ஆரோக்கியப்படுத்தவே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்றும் பார்வையற்றவர்களின் வாழ்க்கைப் பயணம் பல சவால்களுக்கு மத்தியிலேயே நகர்கின்றது. சகல இடங்களிலும் பார்வையற்றவர்கள் பல இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே ஊடாடுகின்றனர். இந்த இடர்பாடு களை தவிர்ப்பதற்கு சமூகத்தவர்களின் உதவி இன்றிய மையாததாகின்றது. எனவே, வெள்ளைப்பிரம்புடன் ஒருவரைக் காணுமிடத்து அவருக்கு வேண்டிய உதவி களை வழங்கி அவருடைய பயணத்தை ஆரோக்கியப் படுத்துவோம்.

குறிப்பாக மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் மத்தியில் வெள்ளைப் பிரம்பின் பயன்பாடு, பாவனை ஆகியவை தொடர்பில் பொருத்தமான விழிப்பூட்டல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசியப்பாடு காணப்படுகின்றது. இந்த விடயத்தை கருவி நிறுவனத்தைச் சார்ந்த பார்வையற்ற அங்கத்தவர்கள், அனுபவ ரீதியாக வெளிப்படுத்தியுள்ளனர். கருவி நிறுவனம் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை யொட்டி விழிப்புணர்வுச் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

வெள்ளைப்பிரம்பு என்பது பார்வையற்றவர்களின் ஓர் அடையாளச் சின்னமாகும். வெள்ளைப்பிரம்பானது பொதுமக்களை விழிப்பூட்டி பார்வையற்றவர்களின் நடமாடுதலை வளப்படுத்துகின்றது. நாம் ஒவ்வொருவரும் இயலுமானளவு பார்வையற்றவர்களுக்கு உதவி புரிந்து அவர்களின் வாழ்வை ஆரோக்கியப்படுத்துவோம். - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.10.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தேசியத்தில் அசலும் போலியும்

போலித் தேசியவாதிகளை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை கட்சியின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கின்றார். இது போலி - இது அசல் என்பதை எவ்வாறு வரையறுப்பது - யார் வரையறுப்பது - எப்படி வரையறுப்பது? இந்தக் கேள்விகளுக்கு பதிலிருந்தால் மட்டும்தான் எது போலி - எது அசல் என்பதை ஒருவர் அறிந்து கொள்ள முடியும்?

ஒரு குறிப்பிட்ட சூழலில் சிலர் இணைந்து பணியாற்றுகின்றனர். அவ்வாறு பணியாற்றுகின்றபோது, அவர்கள் அனைவருமே தேசியவாதிகளாகவே தங்களை முன்னிறுத்திக் கொள்கின்றனர். அவர்கள் சில காரணங்களால் பிரிந்துவிடும் சந்தர்ப்பத்தில் திடீரென்று ஒருவரை மற்றவர் போலித் தேசியவாதி என்கிறார் - இதன் மூலம் தானே சரியானவன் என்கிறார். நேற்றுத் தேசியவாதிகளாக தெரிந்தவர்கள் திடீரென்று எவ்வாறு போலித் தேசியவாதிகளாக மாற்றமடைய முடியும்? உண்மையில், தமிழ் சூழலில் இடம்பெறும் தேசியம் பற்றிய உரையாடல்கள் சலிப்பூட்டுபவர்களாகவே இருக்கின்றன. தேர்தல் காலத்தில் தேசியம் என்பதும் பின்னர் அடுத்த தேர்தல் வரையில் அமைதியாக இருப்பதும்தானா - தேசியம் பற்றிய கரிசனை என்னும் கேள்வி எழுகின்றது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் பரவலான நம்பிக்கை நிலவியது. ஏழு கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டியது. தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் அடிப்படையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொண்டிருந்தால் வடக்கு, கிழக்கின் அதிக ஆசனங்களை கைப்பற்றும் அமைப்பாகத் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு வெளிப்பட்டிருக்கும். ஆனால், ஒரு சில சிவில் சமூகக் குழுக்களின் அரசியல் அறியாமையின் காரணமாக நிலைமைகள் சில தினங்களிலேயே தலைகீழானது.

இதன் விளைவாக, தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக பயணிக்கும் நம்பிக்கையுடனிருந்தவர்கள் சிதற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களில் பொ. ஐங்கரநேசனும் ஒருவர். அவர் இப்போது போலித் தேசியவாதிகளை நிராகரிக்குமாறு கூறுகின்றார். நேற்று வரையில் தான் யாரோடு இணைந்து செயல்பட்டாரோ அவர்களை நோக்கியே கல்லெறிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார். இதுதான் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் இடம்பெறும் சிக்கலான உரையாடல். கடந்த பதினைந்து வருடங்களாக இதுதான் நடக்கின்றது.

ஐங்கரநேசன் போன்றவர்களை இவ்வாறான நிலைக்கு தள்ளிவிட்டமைக்கான பொறுப்பை தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் பெயரில் ஒன்றுபட்ட சிவில் சமூகக் குழுக்களும் அவர்களை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த புத்திஜீவிகளுமே காரணமாவர். ஆனால், இன்றுவரையில் அவர்கள் தங்களின் பொறுப்பின்மைக்கு இதுவரையில் பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடு தங்களுக்கு உண்டு என்று கூட உணராமல் இருப்பதுதான் தவறானது.

# நிகழ்காலத்துடன் எதிர்காலத்தையும் வெற்றிகொள்ள வலுப்படுத்துங்கள்

## தமிழ் மக்களுக்கு டக்ளஸ் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

கடந்த கால தவறுகளிலிருந்து தமிழ் மக்கள் மீண்டெழுந்து நிகழ்காலம் சிறப்பானதாக அமைய ஈ. பி. டி. பியின் வீணை சின்னத்துக்கு ஏகோ பித்து வாக்களித்து வடக்கு - கிழக்கு அரசியலிலும் மாற்றத்தை கொண்டுவர அணி திரள வேண்டுமென அந்தக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி பிரதேச வட்டாரக்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி செயல்பாட்டாளர்களுடனான கலந்துரையாடல் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது,

"வாக்குரிமை என்பது மக்கள் ஒவ்வொருவரினதும் ஜனநாயக ஆயுதமாகும். அந்த ஆயுதத்தை தென்னிலங்கை மக்கள் எவ்வாறு பயன்படுத்தி அரசியலில் மாற்றத்தை கொண்டு வந்துள்ளார்களோ அதே போன்றதொரு மாற்றம் வடக்கு - கிழக்கு அரசியல் புலத்திலும் அவசியமான தொன்றாகும்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான நாள் நெருங்கி வருகின்றது. பலர் பலவாறு கருத்துக்களை கூற முற்படலாம். அவர்களது வெற்று பேச்சுகளுக்கு மக்கள் மயங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது"- என்றார்.

(எ-05)

# கிளிநொச்சியில் நாளை முதல் ஓட்டோ கட்டணங்கள் குறைப்பு

கிளிநொச்சி, ஒக். 14

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை முதல் ஓட்டோ க்கட்டணங்கள் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டி மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினர் நேற்றைய தினம் ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்தினர். இதன்போது நாளை 15ஆம் திகதி முதல் முச்சக்கரவண்டிகளின் கட்டணங்களை குறைக்கவுள்ளதாக தெரிவித்தனர். ஆரம்ப கட்டணமாக 200 ரூபாயாகவும் தொடர்ந்து வரும் கட்டணமாக 100 ரூபாயாக பெறப்பட்ட நிலையில் புதிய அரசாங்கத்தின் பெற்றோல் விலை குறைப்பு காரணமாக ஆரம்ப கட்டணமாக 150 ரூபாயும் தொடர்ந்து வரும் கட்டணமாக 100ரூபாயும் காத்திருப்பு கட்டணமாக நிமிடத்துக்கு ஐந்து ரூபாயாகவும் அறவிடுவதாக தீர்மானித்துள்ளதாக தெரிவித்தனர். கொழும்பில் ஆரம்ப கட்டணம் 100 ரூபாயாக இருந்தாலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிகள் சீரின்மையால் இந்தக் கட்டணத்தை அறவிடுகின்றோம். எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டமும் அபிவிருத்தி அடையும் நிலையில் கொழும்புக்கு நிகராக கட்டணத்தை கொண்டுவர முடியும் என தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டி மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சி. சசிகரன், செயலாளர் வி. அன்ரனி உள்ளிட்டோர் இந்த ஊடகச் சந்திப்பில் பங்கேற்றனர். (எ)

# மன்னார் மாவட்ட மருத்துவமனையில் எலும்பியல் சத்திர சிகிச்சை விடுதிகள்

மன்னார், ஒக். 14

அதிகரித்து வரும் வீதி விபத்துகள் மற்றும் ஏனைய திடீர் விபத்துகளால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உயர் தரமானதும் பாதுகாப்பான சத்திர சிகிச்சை சேவைகளை வழங்கும் நோக்கில் மன்னார் மாவட்ட பொது மருத் துவமனையில் புதிய எலும்பியல் துறை சத்திர சிகிச்சை (ஆண், பெண் இரு பாலாருக்குமான) விடுதிகள் திறந்து வைக்கப்பட்டன.

மன்னார் மாவட் டத்தின் மிக நீண்ட கால தேவையாக விருந்த எலும்பு முறிவு மற்றும் சிகிச்சைக்கான விசேட விடுதிகளை மன்னார் மாவட்ட பொது மருத்துவ மனையின் பணிப்பாளர் அஸாத் ஹனிபா திறந்து வைத்தார்.


இந்த நிகழ்வில் எலும்பியல் சத்திர சிகிச்சை விசேட நிபுணர்கள் பி. திலீபன், ஆர். எம். எம்.




தீபன், ஏனைய விசேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஒக்ரோபர் - 14 திங்கட்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 28
நல்ல நேரம் : 06.70 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**இடபம்**
இதுவரை இருந்த சோர்வு, அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். சகிப்புத்தன்மைதேவைப்படும்.

**கடகம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில்ராஜதந்திரத்தால்லாபத்தை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். திடீர் யோகம் கிட்டும்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**விருட்சிகம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பாராட்டப்படுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். வியாபாரத்தில்வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பினால் லாபம் குறையும். நேர்மறை எண்ணம் வரும் நாள்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். முன்வைத்த கோரிக்கை நிறைவேறும்.

# நுண்ணறிவு, பொது அறிவு குறித்து மாணவர்களுக்கு போட்டி பரீட்சை





யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இருபதுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நுண்ணறிவு, பொது அறிவு மற்றும் தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் சார்ந்த போட்டி பரீட்சைகள் நடத்தப்பட்டன. அப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட பத்து பாடசாலைகளுக்குரிய மேடை வினாடி வினாப் போட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரா தலைமையில் நடைபெற்றது. (எ)

# இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வெற்றிக்காக உழைக்க வேண்டும்

## வேட்பாளர் சிறீதரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 14

தற்போதைய களச்சூழலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வெற்றிக்காக நாம் அனைவரும் இணைந்து உழைக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை விஜய தசமி விழாவும் கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலும் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நாங்கள் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள். தமிழ் மக்களுக்கான பிரச்னைகளை தீர்ப்பதற்காகவும் எங்களது முழு செயல்பாடுகளையும் முன்னிறுத்தியிருந்தோம்.

குறிப்பாக, தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, தமிழ் மக்களுக்கான வடக்கு - கிழக்கு இணைந்த ஓர் அரசியல் தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள் என்பது உண்மையாகும்.

இந்த நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்கள் நியமனங்களில் திருப்தி இருக்கிறதா? இல்லையா? என்பதற்கு அப்பால் இப்போதைய காலச் சூழலில் கட்சியினுடைய வெற்றிக்காக உழைக்க வேண்டும். அதுவே எனது நிலைப்பாடு"- என்றார். (எ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த 9 உணவு நிலையங்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 09 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர் ப. தினேஷ் தலைமையிலான அணியினர் வல்வெட்டித்துறை பகுதிகளில் இயங்கிய உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, சுகாதார சீர்கேட்டுடனும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் 5 இனம் காணப்பட்டன.

அவற்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்குத் தொடரப்பட்ட போது உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களும் மன்றில் முன்னிலையாகி தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டனர்.

அதனையடுத்து அவர்களை எச்சரித்த மன்று ஐவருக்கும் 70 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

அதேவேளை, பருத்தித்துறை நகர சபை ஆளுகைக்குள் உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராகவும் அன்றைய தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இதன் போது உணவு கையாளும் நிலையங்களின் 04 உரிமையாளர்கள் மன்றில் முன்னிலையாகி தம் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்களை எச்சரித்த மன்று அவர்களுக்கு 30ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

அன்றைய தினம் மன்றுக்கு சமுகமளிக்காத உணவு கையாளும் நிலைய உரிமையாளருக்கு எதிர்வரும் 22ஆம் திகதி மன்றில் சமுகமளிக்குமாறு அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

# பிரம்படி படுகொலை நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படி படுகொலையின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பிரம்படி பகுதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படி பகுதியில் 50இற்கும் மேற்பட்ட பொது மக்களை இந்திய இராணுவத்தினர் படுகொலை செய்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் 76 ஆயிரம் பேர் பாதிப்பு



**கொழும்பு, ஒக். 14**
**சீரற்ற காலநிலையால் நாட்டின் 11 மாவட்டங்களில் 76 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. களனி கங்கையின் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

பலத்த மழையால் கிளிநொச்சி, கொழும்பு, களுத்துறை கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, காலி, குருநாகல், கண்டி, பொலநறுவை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் மழையால் களனி கங்கையின் நீர்மட்டம் கணிசமான அளவு உயர்வடைந்து வருவதுடன், அதன் தாக்கத்தினால் மல்வான, தொம்பே, கடுவலை உட்பட பல பிரதேசங்களின் தாழ் நிலங்களும் பல வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேபோன்று, கொலன்னாவை, வெல்லம்பிட்டி கொஹிலவத்தை உட்பட பல பிரதேசங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டு அந்த பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ரூ. 9,700 கோடி திறைசேரி உண்டியல்கள் ஏலம்!

கொழும்பு, ஒக். 14
9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 15ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 4 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

(ஐ)

# 129 சீன கைதிகளின் விசாரணை சி. ஐ. டியிடம் ஒப்படைக்கப்பட்டது!

கொழும்பு, ஒக். 14
இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 129 சீன பிரஜைகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கமைய குறித்த விசாரணைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பணிமனை மற்றும் கண்டி பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது குண்டசாலை பகுதியில் வைத்து நேற்று குறித்த 129 சீன பிரஜைகளும் கைதாகியிருந்தனர்.

(ஐ)

# சிறந்த பாராளுமன்றத்தை அமைக்க ஒத்துழையுங்கள்!

## மக்களிடம் தேசிய மக்கள் சக்தி கோரிக்கை



கொழும்பு, ஒக். 14
சிறந்த பாராளுமன்றத்தை அமைப்பதற்கு எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று மக்களிடம் கோரியுள்ளார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க.

கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்த அவர்,

எமது வேட்பாளர்களுக்கு வாக்குகளை வழங்குங்கள். இவருக்குத்தான் வழங்குங்கள் என்று கூற மாட்டோம். எங்களுடைய கட்சியில் பலர் போட்டியிடுகிறார்கள். எனவே, எங்களுக்குள் பிரிவினையையும் ஏற்படுத்திக் கொள்ளவும் மாட்டோம்.

நாங்கள் மக்களிடம் கேட்பது ஒன்றுதான் சிறந்த பாராளுமன்றத்தை அமைக்க எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். குழு குழுவாக அமைக்கப்பட்டிருந்தாலும் சேவை ஒன்றாகதான் இருக்கும்.

மக்கள் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுகிறார்கள் அதற்கு முதல்அடிதான் இந்த ஜனாதிபதி தேர்தல் அடுத்தது வருகிற தேர்தல் மாற்றம் ஒன்று உருவாகும். எனவே, மக்களுக்கு கூறுவது எங்களுடன் கைகோருங்கள் எனவும் தெரிவித்தார். (ஐ)

லெபனான் - இஸ்ரேல் போர்:

# இலங்கை அமைதி படையினர் உயிராபத்தான நிலையிலாம்!

கொழும்பு, ஒக். 14
லெபனானில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களால் நூறுக்கும் மேற்பட்ட இலங்கை அமைதிப் படையினர் உயிராபத்தான நிலையில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

தென்லெபனானின் நக்குராவில் உள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்கால படையின் மத்திய கட்டளை பீடத்தை இலக்கு வைத்து இஸ்ரேலிய படையினர் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட தாக்குதல்களில் இலங்கை படையினர் இருவர் காயமடைந்தனர்.

இதேவேளை, ஐக்கியநாடுகள் அமைதிப் படையினர் குறிப்பிட்ட எல்லையிலிருந்து வெளியேற வேண்டும் என இஸ்ரேல் வேண்டுகோள் விடுத்துள்ளதை தொடர்ந்து குழப்பநிலை உருவாகியுள்ளது.

அமைதிப் படையினர் அந்த தளத்திலிருந்து வெளியேற வேண்டும் என இஸ்ரேலிய படையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய படையினரை நோக்கி ஹிஸ்புல்லாக்கள் தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

இஸ்ரேல் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையினரை வெளியேறச் சொல்லியுள்ளது என தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்கால படையின் பேச்சாளர் அன்ரே டெனென்டி இஸ்ரேலையும் லெபனானையும் பிரிக்கும் மூன்று கிலோமீற்றர் நீளகோட்டிலிருந்து தங்களை இஸ்ரேல் விலகக் கூறியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அமைதிப்படையினர் இதனை ஏற்க மறுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் கொடியுடன் காணப்படும் அமைதிப் படையின் மத்திய கட்டளை பீடத்தில் 125 இலங்கை அமைதிப் படையினர் உள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேசமயம், காயமடைந்த இலங்கை அமைதிப்படையினர் ஐநாவின் தளத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவித்துள்ள இராணுவ பேச்சாளர் ஏனையவர்கள் தளத்திலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# தேர்தல் கடமைக்கு வராவிடின் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம்

கொழும்பு, ஒக். 14
தேர்தல் கடமைகளுக்கு சமுகமளிக்குமாறு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சகல அதிகாரிகளும் கடமைகளுக்கு கண்டிப்பாக வருகை தருவது அவசியம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் கடமைகளுக்கான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டுள்ள அதிகாரிகள், கடமைக்கு வருகை தரத் தவறும் பட்சத்தில் ஒரு இலட்சம் ரூபாய் தண்டப் பணம் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களுக்கு இந்தத் தண்டனை வழங்கப்படும். தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருக்காமை மற்றும் விண்ணப்பத்தை நிராகரித்திருந்தமை என்பவை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிப்பதற்கான காரணமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கடமைகளுக்கு சமுகமளிக்காத அதிகாரிகள் நாட்டின் அரசமைப்புக்கு இணங்க, தேர்தல் ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்புடன் செயல்படுவதை நிராகரித்துள்ளதாக அல்லது அதற்கு தகுதி இல்லாத நபர் எனக் கணிக்கப்படுவார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 196 எம். பி. பதவிகளுக்காக 8,821 வேட்பாளர்கள் போட்டி

கொழும்பு, ஒக். 14
எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் 196 இடங்களுக்காக 8 ஆயிரத்து 821 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றத்தில் 196 உறுப்பினர்கள் தேர்தல் மூலமும் 29 பேர் தேசியப் பட்டியல் மூலமும் தெரிவாகின்றனர்.

இந்த நிலையில், தேர்தல் திணைக்களத்தின் தகவல்படி, குறித்த 8 ஆயிரத்து 821 வேட்பாளர்களில் 5 ஆயிரத்து 464 வேட்பாளர்கள் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்ப டுத்துகின்றனர். ஏனையோர் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை பாராளுமன்றத்தில் கொழும்பு மாவட்டத்துக்கே இரண்டாவது அதிக ஆசனங்கள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை 18 ஆகும். இந்த 18 ஆசனங்களுக்காக 27 அரசியல் கட்சிகள் 19 சுயேச்சை குழுக்கள் சார்பில் 966 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கமைய கொழும்பு மாவட்டத்திலேயே அதிக வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் கூட்டணிக்குள் குழப்பம் கட்சி தலைவர்கள் இன்று பேச்சு

கொழும்பு, ஒக். 14

**ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பம் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இன்று திங்கட்கிழமை கூடவுள்ளது.**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் கொழும்பு - மலர் வீதியிலுள்ள பணிமனையில் இந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள சகல தேர்தல் மாவட்டங்களினதும் தலைவர்கள் இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன் போது பிரசாரங்களை ஆரம்பித்தல், அதற்கான தொனிப்பொருள் எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

தேசிய அரசியலில் தாம் மூன்றாவது இடத்தில் இருப்பதால் பாராளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றுவதைவிட பலமான எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும் என்பது புதிய ஜனநாயக முன்னணியின் பெரும்பாலான வேட்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் நிலைப்பாடாக உள்ளது.

எவ்வாறிருப்பினும் பிரதமர் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி பிரசாரங்களை முன்னெடுக்காமல், எதிர்க்கட்சி தலைவர் வேட்பாளரை களமிறக்கினால் அது தமக்கு எதிர்மறையான ஒரு நிலவரத்தை ஏற்படுத்தும். எனவே பிரதமர் வேட்பாளர் ஒருவரை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பது பிறிதொரு தரப்பின் நிலைப்பாடாக உள்ளது.

இதற்கமைய தினேஷ் குணவர்த்தனவை பிரதமர் வேட்பாளராக களமிறக்கவும் அந்தத் தரப்பு முன்மொழிந்துள்ளது. இது தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு தீர்மானித்தார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே இன்றைய தினம் பேச்சுகள் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வேட்பாளர் செலவிடும் தொகையை விரைவாக அறிவிக்க நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 14

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஒரு வேட்பாளர், வாக்காளர் ஒருவருக்கு செலவிடக்கூடிய உச்ச வரம்பு குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் காலம் முடிவடைந்ததையடுத்து, தேர்தல் செலவு ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, ஐந்து நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சை குழுத் தலைவர்களின் கருத்துகளை தெரிவிக்க வேண்டும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தலின்போது ஒரு வாக்காளருக்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை குழுக்களின் தலைவர்கள் ஒவ்வொரு மாவட்டத்தின் தேர்தல் அதிகாரிகளால் அழைக்கப்பட்டு, தேர்தல் பிரசாரத்துக்கான அனுமதிக்கப்பட்ட தொகையை தீர்மானிக்க கருத்துகள் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.

ஒரு வேட்பாளர் செலவழிக்கக்கூடிய அதிகபட்ச தொகை, தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை அந்தந்த மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க இலங்கை குழு ரஷ்யா பயணம்

கொழும்பு, ஒக். 14

ரஷ்யாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹருணி விஜயவர்த்தன தலைமையிலான குழு எதிர்வரும் 20ஆம் திகதி கசான் நகருக்கு செல்லவுள்ளது. இந்தப் பயணத்தின் மூலம் பிரிக்ஸ் பொருளாதார கூட்டமைப்பில் இலங்கையின் உறுப்புரிமை தொடரப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் கசான் நகரில் எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் இலங்கை கலந்துகொள்வதற்கான அழைப்பை நடப்பு ஆண்டின் தலைமைத்துவத்தை வகிக்கும் இந்தியா விடுத்திருந்தது. இந்த அழைப்புக்கு சாதகமாக பதிலளித்துள்ள வெளிவிவகார அமைச்சு, பிரிக்ஸ் அமைப்பில் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் அண்மைய கொழும்பு பயணத்தின்போது, இலங்கையின் பிரிக்ஸ் உறுப்புரிமை அபிலாசைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்ட சந்திப்புகளின் போது கலந்துரையாடி இருந்தார்.

சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற முக்கிய உலகப் பொருளாதாரங்களை உள்ளடக்கிய அமைப்பில் இணைவதற்கான நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்திருந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் பிரிக்ஸ் அமைப்பில் இணையும் விருப்பத்தை ஜனாதிபதி அநுரவும் இதன்போது வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்கமைவாகவே இலங்கை பிரதிநிதிகள் குழு ரஷ்யா செல்கிறது.

பிரிக்ஸ் அமைப்பு ஆரம்பத்தில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்காவை உள்ளடக்கியதாக இருந்தது. பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் வளர்ந்து வரும் சந்தை நாடுகளின் ஒரு முக்கிய அரசுகளுக்கிடையேயான அமைப்பாகவே பிரிக்ஸ் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரதான கட்சிகளின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் விவரம் வெளியானது!

கொழும்பு, ஒக். 14

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான கட்சிகள் தமது தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் விவரங்களை வெளியிட்டுள்ளன.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியலில் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோர் உள்ளனர்.

இவர்கள் தவிர, செந்தில் தொண்டமான், சுரேன் ராகவன், ஷியாமலா பெரேரா, மொஹமட் பைசர் முஸ்தபா, டிரான் அலஸ், ஜயந்த வீரசிங்க, ரொனால்ட் சித்ரஞ்சன் பெரேரா, ரவி கருணாநாயக்க, தலதா அத்துகோரள, கனிஷ்க சுரனிமல் ராஜபக்ஷ, மொஹமட் முஸ்தபா அன்வர், நிசங்க நாணயக்கார, சாகல அபேவிக்ரம, சிறிபால அமரசிங்க, வீரகுமார திஸநாயக்க, ரஷ்தான் ரஹ்மான், நிமல்கா பெர்னாண்டோ, தமயந்தி ஜெயசேகர, நியூட்டன் பீரிஸ், லெஸ்லி தேவேந்திர, மஹிந்த செனரத் பண்டார, ஆதம்பாவா லெப்பை திரு, மொஹமட் முஸம்மில், வெல்லாலகே பந்துல, சிறிமசிறி ஹபுஆராச்சி, பியுமி செனரத் சமரதுங்க, கீர்த்தி சிறீ வீரசிங்க.

இதேபோன்று, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில், நாமல் ராஜபக்ஷ, காமினி லொகுகே, சி.பி. ரத்நாயக்க, உத்துராவல தம்மரதன தேரர், திஸ்ஸ விதாரண, ஜயந்த கெட்டகொட, சாகர காரியவசம், திஸ்ஸகுட்டி ஆராச்சி, தெபுவான பியானந்த தேரேர், முஹம்மது பசில் மர் ஜான் அஸ்மி, ரேணுகா பெரேரா, விமல் கீகங்கே, டபிள்யூ.தயாரத்ன, அனுஷா தமயந்தி, ஜகத் வெள்ளவத்தை, வசந்த ஹந்தபாங்கொட, விராஜ் பெரேரா, அதுல பிரியதர்ஷன டி சில்வா, மஞ்சுள வெல்லலகே, ரவிஹார குலதுங்க, தமித் ஹெட்டிஹேவா, ரஞ்சித் பண்டார, விதுர பெரேரா, பசன் கஸ்தூரி பெர்னாண்டோ, சரத் கீர்த்திரத்ன, சுதத் ரோஹண, மகிந்த பத்திரண, ரத்ன தர்மப்ரியா தயா பத்திரண, சமந்தா இந்திக.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில், ராமலிங்கம் சந்திரசேகர், பிமல் ரத்நாயக்க, பேராசிரியர் வசந்த சுபசிங்க, கலாநிதி அனுர கருணாதிலக்க, பேராசிரியர் உபாலி பனிலகே, எரங்க உதேஷ் வீரரத்ன, அருண ஜெயசேகர, கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனித ருவன் கொடிதுக்கு, புண்ய சிறீ குமார ஜெயக்கொடி, கலாநிதி நஜித் இந்திக்க, சுகத் திலகரத்ன, வழக்கறிஞர் லக்மாலி ஹேமச்சந்திர, சுனில் குமார கமகே, காமினி ரத்நாயக்க, பேராசிரியர் ருவன் சமிந்த ரணசிங்க, சுகத் வசந்த டி சில்வா, கீர்த்தி வெலிசரகே, சமிலா குமுது பிரிஸ், அப்துல் ஃபதா முகமது இக்ராம், ரஞ்சன் ஜெயலால் பெரேரா, மொஹமட் முகமது நசீர் இக்ராம், க்ளோமெட் மார்ட்டின் நெல்சன், ரொமேஷ் மோகன் டி மெல், பெனிடா பிரிஷாந்தி ஹெட்டிதந்த்ர, புபுது நுவன் சமரவீர, சரத் லால் பெரேரா, அனுர ஹெட்டிகொட கமகே, ஹேமதிலக கமகே.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில்,

பழனிவேலு பரமேஸ்வரன், பாலகிஷ்ணன் சிவநேசன், ஜி. நகுலேஸ்வரன், சாகரன் விஜயேந்திரன், ரஞ்சித் மத்தும பண்டார, இம்தியாஸ் பகீர் மரிக்கர், டலஸ் அழகப்பெரும, நிசாம் காரியப்பர், சுஜீவ சேனசிங்க, ஜி.எல். பீரிஸ், சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, உபுல் ஜயசூரிய, மஹீம் மெண்டிஸ், உபுல் பண்டார திஸநாயக்க, ரோஹன லக்ஷ்மன் பியதாச, லிஹினி பெர்னாண்டோ, ரவீந்திர சமரவீர, அதுலசிறி சமரகோன், கெனடி குணவர்த்தன, லலித் பிரசன்ன பெரேரா, விசாகா சூரியபண்டார, மகேஷ் சேனநாயக்க, ரவி ஜெயவர்த்தன, டி.டி.பி. விஜயகுணவர்தன, எல். மித்ரபாலா, சந்திம விஜேகுணவர்தன, எம்.எச்.எம்.ரூமி, எம்.ஐ.எம். முஹம்மது, இந்திக்க. (ஐ)

# விசேட தேவையுடைய சிறாரை தாக்கிய விடுதி காப்பாளர் கைது

கொழும்பு, ஒக். 14

விசேட தேவையுடையோர் பாடசாலையின் விடுதியை சேர்ந்த சிறுவர்களை சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் விடுதி காப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அநுராதபுரம் பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விடுதியில் வசிக்கும் 10 முதல் 15 வயதுக்குட்பட்ட செவித்திறன் குறைபாடுடைய ஏழு சிறுவர்களை இந்த காப்பாளர் தடியால் தாக்கினார் என்று பெற்றோரிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

தாக்குதலுக்கு உள்ளான சிறுவர்கள் சட்ட மருத்துவரிடம் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தொழிலாளி உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 14

சுவருக்கு பொருத்தும் பெரும் கண்ணாடிகளை இறக்கியவரின் மீது கண்ணாடிகள் விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

அம்பாந்தோட்டை - ஹூங்கமவில் பிரதேசத்தில் சுற்றுலா ஹோட்டல் வேலைத்தளத்தின் கட்டுமான பணிக்காக வந்த கண்ணாடிகளை வாகனத்திலிருந்து இறக்கியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கண்ணாடிகளை இறக்கிய தொழிலாளியின்மீது 7 கண்ணாடிகள் தொடர்ச்சியாக வீழ்ந்தன. இதன் கீழ் சிக்கிய அவர் படுகாயமடைந்தார்.

அவரை மீட்டு தங்கல்ல மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட பின்னர் அவர் உயிரிழந்தார்.

# 7 வழக்குகள் துரித விசாரணை; ஐக்கிய மக்கள் சக்தி வரவேற்பு

கொழும்பு, ஒக். 14

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், ஊடகவியலாளர் சிவராம் படுகொலை உட்பட ஏழு முக்கிய சம்பவங்கள் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளதை ஐக்கிய மக்கள் சக்தி வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன இட்ட பதிவில்,

"இது சிறந்த முயற்சி. இந்த சம்பவங்கள் குறித்து நான் பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை கோரியுள்ளேன். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி, இந்த சம்பவங்களில் நீதி நிச்சயமாக மறுக்கப்பட்டுள்ளது.

முழுமையான பக்கச்சார்பற்ற துரிதமான விசாரணைகள் நடைபெறும் என நான் நம்புகின்றேன். இதன் மூலம் உண்மையான குற்றவாளிகளை தண்டிக்கலாம்.

இது இலங்கையின் அபிவிருத்திக்கு அவசியமான சட்டத்தின் ஆட்சி மீதான மக்கள் நம்பிக்கையை அதிகரிக்கும்", என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம். பிக்களுக்காக ரூ. 33 கோடி வருடாந்தம் செலவு

கொழும்பு, ஒக். 14

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்காக 33 கோடி ரூபாய் வருடாந்தம் செலவிடப்படுகிறது.**

5 வருடங்களை முழுமையாக பூர்த்தி செய்த பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்படுகின்றது.

5 வருடங்களை பூர்த்தி செய்த ஓர் பாராளுமன்ற உறுப்பினருக்கு 57 ஆயிரத்து 620 ரூபாயும் 15 வருடங்கள் அல்லது அதற்கு மேல் இருந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு சகல கொடுப்பனவுகளுடன் ஒய்வூதியமாக 75 ஆயிரத்து 715 ரூபாயும் வழங்கப்படுகின்றது. (ஐ)

# மகள்களை வன்புணர்ந்த முன்னாள் சிப்பாய் கைது!

கொழும்பு, ஒக். 13

தனது இரு மகள்கள் மற்றும் மருமகளை வன்புணர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாயை விளக்கமறியலில் வைக்குமாறு பொலநறுவை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஓய்வுபெற்ற சிப்பாய் தனது 15 மற்றும் 18 வயதான மகள்களை வன்புணர்ந்துள்ளார். இதேநேரம், தனது சகோதரியின் மகளான 15 வயது சிறுமியையும் வன்புணர்ந்துள்ளார்.

இது தொடர்பில் பொலநறுவை - புலஸ்திகம பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# வீதியில் விழுந்துகிடந்தவர்மீது கார் ஏறியதில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஒக். 14

வீதியில் விழுந்துகிடந்தவரின்மீது கார் ஏறியதில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு குருநாகல் - ஹெட்டிபொல - துத்திரிபிட்டிகம பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் கிடந்த நபரின் மீது கார் ஏறியத்தில் அவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் 52 வயது நபரே உயிரிழந்தார்.

காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# ரயிலுடன் மோதுண்டு மூவர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஒக். 14

ரயில் பாதையை கடக்க முயன்ற மூன்று வயது குழந்தை உட்பட மூவர் உயிரிழந்தனர்.

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் மோதியே இவர்கள் உயிரிழந்தனர். இந்த விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மூன்று வயது குழந்தை காயமடைந்த நிலையில் களுத்துறை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

உயிரிழந்த மூவரும் களுத்துறை தெற்கு ரஜவத்த பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர். (ஐ)

# கட்சி உள்ளக முரண்பாடே அஜித் நீக்கப்பட காரணம்!

## முஜிபுர் ரஹ்மான் இப்படி விளக்கம்

கொழும்பு, ஒக். 14

ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக முரண்பாடுகள் காணப்படுகின்றன. அதன் அடிப்படையிலேயே அஜித் மன்னம்பெரும தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். தமிதா அபேரத்னவின் பெயர் இறுதி நேரத்தில் நீக்கப்பட்டமை நியாயமற்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அஜித் மன்னம்பெரும விவகாரம் கட்சியின் உள்ளக பிரச்னையாகும். அவரின் தொகுதி அமைப்பாளர் பதவி எதற்காக பறிக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. ஆனால், வேட்புமனு தாக்கலின் பின்னரே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கட்சி தலைவர் மற்றும் செயலாளரின் நிலைப்பாட்டை கோர வேண்டும்.

தமிதா அபேரத்னவுக்கு வேட்புமனு இடமளிக்குமாறு கட்சி தீர்மானித்திருந்த நிலையில், இறுதிக் கட்டத்தில் எதற்காக அந்தத் தீர்மானம் மாற்றப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது. எனினும், இது அநியாயம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே கட்சி இந்த விவகாரம் தொடர்பில் ஆராயும் என்று எதிர்பார்க்கின்றோம்.

சம்பிக்க ரணவக்கவின் கட்சியில் வேட்பாளர்களை களமிறக்குவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே அவர் விலகினார் என்பதே நான் அறிந்த காரமாகும். தயாசிறி ஜயசேகரவின் பெயர் குருநாகல் வேட்பு மனு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதும் தெரியாது - என்றார். (ஐ)

# அரசாங்க பலத்தை அநுரவுக்கு வழங்கி எமக்கு எதிர்க்கட்சி பலத்தை தாருங்கள்

## இது நிமல் லான்சாவின் கோரிக்கை



கொழும்பு, ஒக். 14

எமக்கு அரசாங்க அதிகாரம் தேவையில்லை. அதனை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான திசைக்காட்டிக்கு வழங்குங்கள். ஆனால், எமக்கு பலமான எதிர்க்கட்சியே தேவை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

நீர்கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சிலிண்டர் சின்னத்தில் பலமான அணியை களமிறக்கியிருக்கின்றோம். ராஜபக்ஷர்கள் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் அரசியலிலிருந்து விலகுவார்களா எனத் தெரியாது. சிறீ லங்கா பொதுஜன பெரமுன ராஜபக்ஷர்களின் கட்சியாகும். அவ்வாறிருக்கையில், அந்த கட்சியின் சார்பாக தேர்தலில் போட்டியிடாமல் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு வர முயற்சிப்பது தவறான முன்னுதாரணமாகும்.

எமக்கு அரசாங்க அதிகாரம் தேவையில்லை. அதனை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான திசைக்காட்டிக்கு வழங்குங்கள். ஆனால், எமக்கு பலமான எதிர்க்கட்சியே தேவையாகும். கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற 38 எம். பிக்கள் எம்மில் இருக்கின்றனர். இம்முறை அதனை விட அதிக ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் என்று நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் ஜே.வி.பி.யில் 39 எம்.பி.க்கள் காணப்பட்டனர். ஆனால், பின்னர் அந்த எண்ணிக்கை மூன்றாகக் குறைவடைந்தது. முன்னர் இருந்த எவரும் இம்முறைத் தேர்தலில் களமிறங்கவில்லை. காரணம், மக்கள் அவர்களை புறக்கணித்துள்ளனர். ஜனாதிபதி அநுரவின் வெற்றியை பயன்படுத்திக்கொண்டு பாராளுமன்றத்துக்கு வருவதே பெரும்பாலானோரின் நோக்கமாக உள்ளது.

மக்கள் எமது அரசாங்கத்தைப் புறக்கணித்தாலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களையே தற்போதைய அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்கிறது. ரணிலின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அநுர ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை. அவர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் - என்றார். (ஐ)

# பெற்றோல் லீற்றருக்கு ரூ. 82ஆல் குறைக்கலாம்

கொழும்பு, ஒக். 14

அரசாங்கம் எரிபொருள் விலையை குறைக்கத் தவறியுள்ளதாகவும் ஒரு லீற்றர் பெற்றோலை 82 ரூபாயால் குறைக்க முடியும் ஐக்கிய கூட்டமைப்பு தொழிற்சங்க அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலாபமீட்டும் நிலையில் எரிபொருள் லீற்றர் ஒன்றுக்கு மேலதிகமாக 50 ரூபாய் வரி அறவீடு செய்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பதவியை ஏற்றுக் கொள்ள முன்னதாக இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார் என ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் தற்போது ஆயிரத்து 100 கோடி ரூபாய் இலாபமீட்டி வருகிறது. 50 ரூபாய் வரி நீக்கத்துடன் எரிபொருள் ஒரு லீற்றரின் விலையை 82 ரூபாயால் குறைக்க முடியும் - என்றார். (ஐ)

# முறைகேடான வாகன பயன்பாடு 1997இற்கு முறைப்பாடளிக்கலாம்

கொழும்பு, ஒக். 14

அரசு பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் மோசடியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ பயன்படுத்தப்பட்டால் அல்லது மறைத்து வைக்கப்பட்டிருந்தால் 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த அவசர தொலைபேசி தொலைபேசி இலக்கம் 24 மணி நேரமும் பாவனையில் இருக்கும். தகவல் அளிப்பவர்களின் அடையாளம் மற்றும் தனிப்பட்ட விபரங்கள் முழுமையா பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உண்மையான தகவல்களை மட்டுமே வழங்க வேண்டும் எனவும் தவறான தகவல்களை வழங்குபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 50 மதுபானசாலைகளின் அனுமதி தொடர்பில் மறுபரிசீலனைக்கு முடி!

கொழும்பு, ஒக். 14

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட ஐம்பது மதுபானசாலைகளுக்கான உரிமங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் அவை மீண்டும் வழங்கப்படுவதற்கு அல்லது இரத்து செய்யப்படுவதற்கு முன்னர் மறுபரிசீலனை செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தலை முன்னிட்டு அரசியல் தொடர்புகள் மூலம் பல்வேறு மட்டத்தினருக்கு இந்த 50 உரிமங்கள் வழங்கப்பட்டன. இந்நிலையில், குறித்த உரிமங்களை பெற்ற பலர் அவற்றை இரத்து செய்ய வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, உரிமம் பெற விரும்புவோருக்கு புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்படவுள்ளன. மதுபானசாலைகளை திறப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் பட்சத் தில், இந்த வழிகாட்டுதல்களின் படி விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது.

புதிய உரிமங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் குடியிருப்பாளர்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகளின் அமைவிடங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 இலட்சத்து 55 ஆயிரத்து 432 பேர் அம்பாறையில் வாக்களிக்க தகுதி

கல்முனை, ஒக். 14

**அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் 5 இலட்சத்து 55 ஆயிரத்து 432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.**



2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் 2024 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் 2024. 10. 04 தொடக்கம் 2024. 10. 11 வரையான காலப்பகுதியில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 07 ஆசன தெரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட 22 அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்கள் 50 இனதும் நியமனப் பத்திரங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.

அத்துடன் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்த அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியும் 07 சுயேச்சைக் குழுக்களையும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய பல்வேறு குறைபாடுகளை கருத்தில் கொண்டு நிராகரித்துள்ளோம். இதன்படி தற்போது அங்கீகரிக்கப்பட்ட 21 அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக்குழுக்கள் 43 இனது நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். மொத்தமாக 64 அரசியல் கட்சிகள் உட்பட சுயேச்சைக்குழுக்கள் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக போட்டியிடுகின்றன.

2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் அறிவித்த பின்னர் அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றறும் அமைதியானதுமான தேர்தல் செயல்பாடுகள் நடைபெற்று கொண்டு வருகின்றன. பெரியளவிலான வன்முறைகள் எவையும் இதுவரை இடம்பெறவில்லை.

எனினும் சிறு சம்பவங்கள் தேர்தல் கண்காணிப்பு ஊடாக கிடைக்கப் பெற்றிருந்தன. அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. வன்முறையற்ற நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும் தெரிவத்தாட்சி அலுவலருமான நானும் பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்"- என்றார். (எ)

# மட்டு. மருத்துவமனையில் சி. சி. ரீவி கமரா திருட்டு!

## சிற்றூழியர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஒக். 14

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் பொருத்தப்பட்டிருந்த சி. சி. ரீவி கமராவை திருடிய சிற்றூழியரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு குறித்த சிற்றூழியர் திருடிய காட்சிகள் சி. சி. ரீவி கமராவில் பதிவாகியுள்ளது.

இதனை அவதானித்த மருத்துவமனை நிர்வாக பணிப்பாளர், பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த நபரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (எ)

# கரடியனாறு, களுவாஞ்சிக்குடியில் இரு நாட்களில் 18 மாடுகள் திருட்டு


கரடியனாறு, ஒக். 14

மட்டக்களப்பு கரடியனாறு, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் கடந்த இரு தினங்களில் 7 பசுமாடுகள், 11 எருமைகள் உட்பட 18 மாடுகள் திருட்டுப் போயுள்ளதாக சனிக்கிழமை பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு பொலிஸ் பிரிவில் கடந்த வியாழக்கிழமை இரவு 11 எருமை மாடுகள் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்,

இதேவேளை கடந்த வியாழக்கிழமை வெல்லாவெளி பிரதேசத்தில் 3 பசுமாடுகளும், வெள்ளிக்கிழமை ஒரு பசுமாடு உட்பட 4 மாடுகளும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பிரிவில் 3 பசுமாடுகளும் காணாமல் போயுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் நவராத்திரியை முன்னிட்டு கல்லூரி பீடாதிபதி எஸ். புண்ணியரெத்தினம் தலைமையில் கோலப்போட்டி நடைபெற்றது.

# வீட்டுத்திட்ட சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்தும் திட்டம்

கல்முனை, ஒக். 14

கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில் உள்ள வடிகான் உள்ளிட்ட சுற்றுச்சூழலை துப்புரவு செய்யும் சிரமதானப்பணி ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை மாநகர சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், கல்முனை பொலிஸ், பொது அமைப்புகளின் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இதனையொட்டி பொதுமக்களை விழிப்பூட்டும் வகையில் பல கூட்டங்களும் கலந்துரையாடல்களும் பல்வேறு மட்டங்களிலும் நடைபெற்றன. அந்த வகையில் கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி சரப்டீன் தலைமையில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. இதன்போது சுகாதார அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக விளக்கமளித்தனர். அத்துடன் பொது மக்களை விழிப்பூட்டும் வகையிலான பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதேவேளை கிரீன் பீல்ட் வீட்டுத்திட்ட சுகாதார கழிவு முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி அதனை முறையாக மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது. இந்த சிரமதான நிகழ்வில் பொதுமக்களும் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்புகளை வழங்கினர். (எ)

# பிள்ளையான் கட்சியின் தேசிய பட்டியல் ஆசனம் அம்பாறைக்கு வழங்கப்படும்

காரைதீவு, ஒக். 14

சில வேளை நாம் இங்கு வெற்றி பெறாவிட்டால், எமது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய பட்டியல் ஆசனம் அம்பாறை மாவட்டத்துக்கு நிச்சயம் கிடைக்கும் என்று அதன் தலைவர் பிள்ளையான் உறுதியாக கூறியுள்ளார்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட வேட்பாளர் அற்புதலிங்கம் விஸ்கரன் தெரிவித்தார். அம்பாறை ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"நான் முதல் முதலாக தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியில் காரைதீவிலிருந்து போட்டியிடுகின்றேன். எனது தலைவர் பிள்ளையான் மட்டக்களப்பில் செய்த அபிவிருத்திகள் பற்றி அனைவரும் அறிவார்கள். அதேபோல் அம்பாறையிலும் செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அதற்காகவே வெற்றி பெறும் அணியில் இறங்கி இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் எம் மத்தியில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். யாருமே எதுவும் செய்யவில்லை.



கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இன்னும் ஒரு கணக்காளரை கூட நியமிக்க முடியவில்லை. திருக்கோவில் இல்மனைற் அகழ்வு மற்றும் வீரமுனை வரவேற்பு வளைவு என்று பட்டியல் தொடர்கிறது. ஆனால் இம் முறையும் வெள்ளை வேட்டி வெள்ளை சேர்ட் போட்டுக்கொண்டு தேசியம் பேசி ஏமாற்ற வருவார்கள். தேசியம் என்பதே கிடையாது. அது ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை. ஏமாற வேண்டாம் மக்களே! அவர்களுள் ஒற்றுமை இல்லை. பிரிந்து சின்னாபின்னமாகி உள்ளனர். ஆளுக்கொரு சின்னம்.

நான் ஒரு விளையாட்டு வீரன். வெற்றி பெறுவோம் என்று ஆடுகளத்தில் இறங்குவோம். நாங்கள் வெற்றி பெற்று வருகின்ற அரசாங்கத்தில் இணைந்து அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்க இருக்கின்றோம்.

சில வேளை எமது கட்சி அம்பாறை மாவட்டத்தில் வெற்றி பெறாவிட்டால் எமக்கு கிடைக்கும் தேசிய பட்டியல் ஆசனத்தை இங்கு தருவதாக எமது தலைவர் வாக்குறுதியளித்து இருக்கின்றார். இப்படி யாரும் இதுவரை வாக்குறுதியளிக்கவில்லை.

கடந்த முறை இங்கே ஆசனம் பறிபோகும் என்பதற்காகவே நாங்கள் போட்டியிடவில்லை. ஆனால், இம்முறை நிச்சயம் ஆசனம் கிடைக்கும் என்பதால் முதன்முதலாக களமிறங்கி இருக்கின்றோம். மக்களே உணர்ந்து சிந்தியுங்கள்- வாக்களியுங்கள்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் அணுசக்தி தளங்களின் இரகசிய தகவல்கள் திருட்டு!

## இஸ்ரேலின் பலமுனை சைபர் தாக்குதலில் ஸ்தம்பித்தது ஈரான்

தெஹ்ரான், ஒக். 14


**இஸ்ரேல் உளவுத் துறையின் சைபர் தாக்குதலால் ஈரான் அரசின் செயல்பாடுகள் முற்றாக முடங்கின. குறிப்பாக ஈரானின் அணுசக்தி தளங்கள் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு இரகசியங்கள் திருடப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.**

இதேவேளை, ஈரானின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில் அமெரிக்க அரசு, அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதித்தது. இதன்படி, ஈரானில் கச்சா எண்ணெய் மற்றும் பெற்றோலிய பொருட்கள் ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் 10 நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.

இந்தச் சூழலில் ஈரான் அரசு நிர்வாகம், பாராளுமன்றம், சட்டப்பேரவை நிர்வாகம் மற்றும் நீதித் துறை நிர்வாகத்தை குறிவைத்து இஸ்ரேல் உளவுத் துறை தொடர் சைபர் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதன் காரணமாக ஈரான் அரசின் செயல்பாடுகள் முற்றிலுமாக முடங்கியுள்ளது. குறிப்பாக ஈரானின் அணுசக்தி தளங்கள், எரிசக்தி, மின் விநியோக கட்டமைப்பின் செயல்பாடுகள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

ஈரான் முழுவதும் உள்ள வங்கிகள் முடங்கியுள்ளன. ஏ.ரி.எம். மையங்களில் இருந்து பணம் எடுக்க முடியவில்லை.

ஈரானின் அனைத்து அரசு துறைகள் மீதும் சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. மிக முக்கிய ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன. ஈரானின் அணுசக்தி தளங்கள், எண்ணெய் குழாய் கட்டமைப்பு, போக்குவரத்து, துறைமுகங்கள் ஆகியவற்றின் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈரான் அணுசக்தி தளங்களின் இரகசிய ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன. இதனால், ஈரான் முழுவதும் குழப்பமான சூழல் நிலவுகிறது. (எ)



## இராவணனுக்கு இந்தியாவில் இரங்கல்

புதுடில்லி, ஒக். 14

இந்தியாவின் உத்தர பிரதேசம் பிஸ்ரக் கிராமத்தில் இராவணன் பிறந்ததாக நம்பப்படுகிறது. இந்த கிராமத்தினர் நவராத்திரி கொண்டாடுவதில்லை. இராவணனின் ஞானத் துக்கும், சிவ பக்திக்கும் அவர் போற்றப்பட்டிருக்க வேண்டியவர் என்று நம்புகின்றனர்.

ஆகையால் அவர் வதம் செய்யப்பட்ட நாளில் அவரது ஆன்மா சாந்தியடைய சமய சடங்குகளை கடைப்பிடிக்கின்றனர். ஆகவே தசரா அன்று தங்களது கிராமத்தில் உள்ள பிஸ்ரக் இராவணன் கோவிலில் வழிபாடு நடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதேநேரம் இந்த ஊர் மக்கள் இராமரையும் பக்தியுடன் வணங்குகின்றனர். (எ)

# ரஷ்யா, சீனா ஈரானுக்கு தொழில்நுட்ப உதவிகள்

தெஹ்ரான், ஒக். 14

மத்திய கிழக்கில் போர் மேகம் சூழ்ந்துள்ள நிலையில் ரஷ்யாவும் சீனாவும் ஈரானுக்கு தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. குறிப்பாக சீனா, ஈரானுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.

இஸ்ரேல் உளவுத் துறையால் ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லா அலி காமெனியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, ட்ரோன் தாக்குதல்களில் இருந்து அவரை காப்பாற்ற சீன அரசு சார்பில் அதிநவீன லேசர் தடுப்பு சாதனம் ஈரானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் காமெனி, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள பெரிய மசூதியில் பொது மக்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது இராணுவ வாகனங்களில் பொருத்தப்பட்ட சீன லேசர் தடுப்பு சாதனங்கள் மூலம் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

ஈரானின் அணுசக்தி தளங்களை சைபர் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க, சீன அரசு சார்பில் மென்பொருட்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால், அவற்றை மீறி இஸ்ரேல் உளவுத் துறை ஈரான் அணுசக்தி தளங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. (எ)

# சஹாரா பாலைவனத்தில் மழை, வெள்ளப்பெருக்கு!

## 50 ஆண்டுகளில் முதல்முறை

மொராக்கோ, ஒக். 14

சஹாரா பாலைவனத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் சஹாரா பாலைவனப் பகுதியில் வெள்ளம் ஏற்படுவது இதுவே முதல்முறை.

ஆபிரிக்க கண்டத்தில் மொராக்கோவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சஹாரா பாலைவனம் தான் உலகின் மிகவும் வறண்ட பாலைவனமாக அறியப்படுகிறது. பல கொடிய விஷம் மிகுந்த ஊர்வன உயிரினங்களைக் கொண்டது இப்பாலைவனம். சஹாராவில் மழை வெள்ளம் என்பது அரிதினும் அரிது. அந்த வகையில் அண்மையில் அங்கு பெய்த திடீர் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. ஓராண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரிரு நாட்களில் பெய்ததால் சஹாரா பாலைவனத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இந்த திடீர் கனமழையால் சஹாரா பாலைவனத்தில் உள்ள இரிக்கி என்ற வறண்ட ஏரியில் நீர் நிரம்பியுள்ளது. இந்த வறண்ட



சஹாராவில் ஜகோரா - டாடா மணல் படுக்கைகளுக்கு இடையே உள்ளது. இந்த நிலையில் திடீர் மழை வெள்ளத்தால் நிரம்பிய இரிக்கி ஏரியின் காட்சிகள் கொண்ட புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

"குறைந்த நேரத்தில் இத்தனை பெரிய மழைப்பொழிவு பதிவாகி 30 முதல் 50 ஆண்டு காலம் ஆகிவிட்டது. தலைநகர் ரபாட்டாவில் இருந்து 450 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள டாகோயுனைட் கிராமத்தில் பெய்த கனமழையால் இந்த வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அங்கு 24 மணி நேரத்தில் 100 மில்லி மீற்றர் மழைப் பொழிவு பதிவாகியுள்ளது" என்று மொராக்கோ நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (எ)

# முதல்வராகிறார் உமர் அப்துல்லா

புதுடில்லி, ஒக். 14

காஷ்மீர் முதல்வராக உமர் அப்துல்லா நாளை மறுதினம் 16ஆம் திகதி பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஹரியானாவில் வரும் 17ஆம் திகதி பதவியேற்பு விழா நடைபெறுகிறது. (எ)



# மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஈரான் மீண்டும் எச்சரிக்கை

தெஹ்ரான், ஒக். 14

இஸ்ரேலுக்கு உதவி செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஈரான் எச்சரித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து ஈரான் இராணுவம் 180 ஏவுகணைகளை வீசியது. இதில் பெரும்பாலான ஏவுகணைகளை இஸ்ரேல் இராணுவம் நடுவானில் அழித்தது. சில ஏவுகணைகள் தரையில் விழுந்து பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தின.

இந்தத் தாக்குதலுக்காக ஈரானுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். இதன்படி ஈரானின் எண்ணெய் கிணறுகள், மின் விநியோக கட்டமைப்பு, அணு ஆயுத தளங்கள் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த சூழலில் ஈரான் வெளிவிவகார அமைச்சு, மத்திய கிழக்கில் உள்ள நாடுகளுக்கு தூதரகங்கள் வாயிலாக எச்சரிக்கை விடுத்துள்ளது. "இஸ்ரேலுக்கு உதவி செய்யும் நாடுகள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக ஏதாவது ஒரு நாடு தனது வான்பரப்பை இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்த அனுமதித்தால் அந்த நாடு மிக மோசமான விளைவுகளை சந்திக்கும்" என்று ஈரான் எச்சரித்துள்ளது. (எ)

# சுரங்க தொழிலாளர்கள்மீது பாகிஸ்தானில் தாக்குதல்

## 20 பேர் உயிரிழந்தனர்

இஸ்லாமாபாத், ஒக். 14

பாகிஸ்தானின் பலோசிஸ்தானில் சுரங்க தொழிலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர்.

தனியாருக்குச் சொந்தமான சிறிய நிலக்கரி சுரங்கத்தில் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை எந்தக் குழுவினரும் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அசத்தல் வெற்றி

## ரி - 20 தொடரையும் முழுமையாக இழந்தது பங்களாதேஷ்

ஹைதராபாத், ஒக். 14

மூன்றாவது மற்றும் கடைசி ரி - 20 கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணியை 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்திய அணி, தொடரை முழுமையாக கைப்பற்றியது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் மற்றும் 3 ரி - 20 கிரிக்கெட் தொடர்களில் விளையாடியது. இந்த இரண்டு தொடரையும் முழுவதுமாக அந்த அணி இழந்தது.

மூன்றாவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை ஹைதராபாத் நகரில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்று இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 297 ஓட்டங்கள் குவித்தது இந்திய அணி.

298 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பங்களாதேஷ் அணி விரட்டியது. தவ்ஹித் 42 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்தார். லிட்டன் தாஸ் 25 பந்துகளில் 42 ஓட்டங்கள் சேர்த்தார். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 164 ஓட்டங்கள் எடுத்தது அந்த அணி. இதன் மூலம் இந்தியா 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா சார்பில் ரவி பிஷ்னோய் 3, மயங்க் யாதவ் 2, வாஷிங்டன் சுந்தர் மற்றும் நிதிஷ் ரெட்டி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருதை சஞ்சு சாம்சனும், தொடர் நாயகன் விருதை ஹர்திக் பாண்டியாவும் வென்றனர்.

முன்னதாக, முதல் இன்னிங்ஸில் சஞ்சு சாம்சன் - அபிஷேக் சர்மா ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். 2ஆவது ஓவரில் தொடர்ந்து 4 பௌண்ட்ரிகள் அடித்து வெளுத்து வாங்கினார் சஞ்சு சாம்சன். மறுபுறம் இருந்த அபிஷேக் சர்மா 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் சிக்ஸர்களாக பறக்கவிட்டு சிறப்பித்தார். இதனால் இந்திய அணி பவர் பிளே முடிவில் ஒரு விக்கெட் இழந்து 82 ஓட்டங்களைச் சேர்த்தது. இதுதான் ரி - 20 போட்டிகளில் பவர் பிளேவில் இந்தியாவின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை.

இருவரும் பங்களாதேஷ் அணியின் பந்துகளை அடித்து துவம்சம் செய்ய 22 பந்துகளில் சஞ்சு சாம்சன் அரைச்சதம் கடந்து அசத்தினார். இது சஞ்சு சாம்சனின் அதிவேக அரைச்சதமாகும். 10ஆவது ஓவரில் மட்டும் 5




சிக்ஸர்களை விளாசினார் சஞ்சு சாம்சன். ரிஷாத் ஹூசைன் வீசிய அந்த ஓவரில் மட்டும் 30 ஓட்டங்களைச் சேர்த்தார் சஞ்சு. 10 ஓவர்கள் முடிவில் இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 152 ஓட்டங்களைச் சேர்த்தது. மறுபுறம் சூர்யகுமார் யாதவ் 23 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். சஞ்சு சாம்சன் 40 பந்துகளில் சதமடித்து மிரட்டினார். முஸ்தபிசுர் ரஹ்மான் வீசிய 14ஆவது ஓவரில் 111 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் சஞ்சு சாம்சன். 47 பந்துகளில் 8 சிக்ஸர்களை விளாசிய சஞ்சு சாம்சனுக்கு இது சிறப்பான இன்னிங்ஸ்.

அவரைத் தொடர்ந்து 5 சிக்ஸர்கள் விளாசிய சூர்யகுமார் யாதவ் 75 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 17 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்த இந்திய அணி 252 ஓட்டங்களைச் சேர்த்தது. 4 சிக்ஸர்களை விளாசிய ரியான் பராக் 34 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். 18 பந்துகளில் 47 ஓட்டங்களைச் சேர்த்து சிறப்பாக விளையாடிய ஹர்திக் பாண்டியா அரைச்சதமின்றி ஆட்டமிழந்து களத்திலிருந்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து நிதிஷ்குமார் ரெட்டி ஆட்டமிழக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்த இந்தியா 297 ஓட்டங்களை குவித்தது. ரிங்கு சிங் 8 ஓட்டங்களுடனும், வாஷிங்டன் சுந்தர் ஒரு ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். பங்களாதேஷ் அணி தரப்பில் தன்ஜிப் ஹசன் சகீப் 3 விக்கெட்களையும், தஸ்கின் அஹமது, முஸ்தபிசுர் ரஹ்மான், மஹ்மதுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த நிலையில் இந்தியா 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)



# சுயநலமற்ற வீரர்களே என் அணிக்கு தேவை

## சூர்யகுமார் யாதவ் தெரிவிப்பு

ஹைதராபாத், ஒக். 14

சுயநலமற்ற வீரர்கள்தான் என் அணிக்குத் தேவை என்று இந்திய அணியின் தலைவர் சூர்யகுமார் யாதவ் தெரிவித்தார்.

ஓர் அணியாக நிறைய சாதித்திருக்கிறோம். முக்கியமாக தொடரின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட போது என் அணியில் தன்னலமற்ற வீரர்கள் வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். ஹர்திக் பாண்டியா சொல்வது போல் தன்னலமற்ற, பரஸ்பரம் ஒருவர் ஆட்டத்தை மற்றவர்கள் மகிழ்வுடன் வரவேற்கும் மன நிலையே தேவை என்று கூறுவேன்.

களத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இதே பரஸ்பர உறவுகள், சகோதரத்துவம் தொடர்வதையும் விரும்புகிறேன். இப்படிப் பட்ட மனநிலை வந்து விட்டால் மைதானத்தில் கேளிக்கை தவிர வேறெதுவும் இருக்காது.

கவுதம் கம்பீர் சொல்வார், 'அணியை விட எந்த ஒரு தனி வீரரும் பெரிய ஆள் கிடையாது' என்று. ஒரு துடுப்பாட்ட வீரர் 99 ஓட்டங்களில் இருந்தாலும் 49 ஓட்டங்களில் இருந்தாலும் அடிக்க வேண்டிய பந்தை அடித்து, மைதானத்துக்கு வெளியே அடிக்க வேண்டிய பந்தாக இருந்தால் மைதானத்துக்கு வெளியே அனுப்ப வேண்டியதுதான். சஞ்சு அதைத்தான் செய்தார், அவருக்காக மகிழ்ச்சியடைகிறேன்- என்றார். (எ)

# டோனியின் புதிய தோற்றம்

புதுடில்லி, ஒக். 14



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் எம். எஸ். டோனியின் புதிய தலைமுடி அலங்காரம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. சர்வேதச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும், ஐ. பி. எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக டோனி விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் சமூக வலைத்தளங்களில் எம். எஸ். டோனியின் புதிய புகைப்படம் ஒன்று வைரலாகி வருகிறது. (எ)



# தென்னாபிரிக்கா வெற்றி

டுபாய், ஒக். 14

பங்களாதேஷுக்கு எதிராக டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற மகளிர் ரி - 20 உலகக் கிண்ண பி குழு போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

இந்தக் குழுவில் 3 ஆவது வெற்றியை ஈட்டிய தென்னாபிரிக்கா 6 புள்ளிகளைப் பெற்று பி குழுவில் முதலிடத்துக்கு முன்னேறியது.

ஆனால், அதன் அரை இறுதி வாய்ப்பு இன்னும் உறுதியாகவில்லை.

இங்கிலாந்து அடுத்த 2 போட்டிகளிலும் வெற்றி பெற்றால் தென்னாபிரிக்கா அரை இறுதியில் விளையாடத் தகுதிபெறும். இங்கிலாந்தும் மேற்கு இந்திய தீவுகளும் வெற்றிபெற்றால் 3 அணிகள் தலா 6 புள்ளிகளைப் பெற்றிருக்கும். அப்போது நிகர ஓட்ட வேக அடிப்படையில் முதலிரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் 107 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 17. 2 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

# 8 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து மகளிர் வெற்றி

## முதல் சுற்றுடன் வெளியேறியது இலங்கை


ஷார்ஜா, ஒக். 14

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி - 20 போட்டியில் நியூசிலாந்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மகளிர் ரி - 20 உலகக் கிண்ண தொடரில் நேற்று முன்தினம் ஷார்ஜாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையால் நிர்ணயிக்கப்பட்ட 116 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 17 . 3 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

நியூசிலாந்திடம் அடைந்த தோல்வியுடன் இலங்கை தனது நான்கு போட்டிகளிலும் தோல்வியுற்ற அணியாக வெளியேறியது.

அத்துடன் இதுவரை விளையாடிய 9 உலகக் கிண்ண அத்தியாயங்களிலும் இலங்கை அணி முதல் சுற்றுடன் வெளியேறியமை இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)





# வேகப்பந்து வீச்சாளர் சிராஜ் டி. எஸ். பியாக பதவியேற்பு

ஹைதராபாத், ஒக். 14

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முஹமது சிராஜ், தெலுங்கானா டி. ஜி. பி. அலுவலகத்தில் டி. எஸ். பியாக பொறுப்பேற்றுக் கொண்டார். விளையாட்டுத் துறையில் சிறப்பான பங்களிப்பை அளித்து வரும் சிராஜுக்கு டி. எஸ். பி. பொறுப்பு வழங்கி தெலுங்கானா அரசு கௌரவித்துள்ளது.

ஜூன் மாதம் நடைபெற்ற ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் சிறப்பாக விளையாடி இந்திய அணி கிண்ணம் வெல்ல உறுதுணையாக இருந்தவர் வேகப்பந்து வீச்சாளர் சிராஜ் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரும்...

மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, 'இரு நாடுகளின் மீனவர் விவகாரம் இரு தரப்புக்கும் பெரும் பிரச்னையாக உள்ளது. எனவே, எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கை, இந்திய கடற்றொழில் அமைச்சுகளுக்கு இடையில் 6ஆவது தடவையாக பேச்சுகளை முன்னெடுத்து அதன் ஊடாக இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் பொதுத் தீர்வு ஒன்றை எட்ட எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தவிர, மீனவர் விவகாரம் தொடர்பில் இலங்கை - இந்திய கடற்றொழில் அமைச்சுகள் பேசவுள்ளன. எனினும், இதில் பங்கேற்பவர்களின் விவரங்களை இந்தியா அறிவிக்கவில்லை. எனினும், பங்கேற்பாளர்களின் விவரம் கிடைத்ததும் பேச்சுக்கான ஆயத்தப் பணிகள் விரைவுபடுத்தப்படும் - என்று கடற்றொழில் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ஐ)

## வேட்பாளர்...

தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கலந்து கொள்ளுமாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அழைக்கப்பட்டபோதும் அவர் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அரசியலில்...

மாற்றம் இதுதான். ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது எதிர்கட்சி யினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை 21 நாட்கள் முடிவதற்கு முன்னரே தேசிய மக்கள் அரசாங்கத்தால் நிரூபிக்க முடிந்துள்ளது.

எதிர்க்கட்சி முகாமில் இப்போது பொதுத் தேர்தலுக்கான கோஷங்கள் ஏதும் இல்லாமல் போய்விட்டன. எதிர்க்கட்சி முகாம் எங்களுக்கு எதிராக தவறான விமர்சனங்களை செய்தது. தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குப் பிறகு மோதல்கள் ஏற்படும் - எரிவாயு - எரிபொருளுக்கு வரிசைகள் ஏற்படும் என்றார்கள். அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு குறையும் - சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப் படுத்தப்பட்ட நாடாகும் என்றெல்லாம் பலவற்றை கூறினார்கள். ஆனால், இந்த விமர்சனங்கள் அனைத்தும் 21 நாட்களுக்குள் அவர்களின் கண் முன்னே சிதைந்துவிட்டன - என்றார். (ஐ)

## ஹெகலியவும்...

"நான் அரசியல் அநாதை இல்லை. அரசியலில் இருந்து தற்காலிகமாக ஓய்வு பெறுகிறேன். ஆனாலும், எனக்கான மக்களின் ஆதரவு அப்படியே உள்ளது. ஒரு வர்த்தகராக நான் சம்பாதித்த பணத்தைவிட அரசியலில் ஈடுபட்டு பெறப்படும் மக்களின் அன்பு மதிப்பு மிக்கது.

"நீதிமன்றத்தின் மூலம் நீதி கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளது. நிரபராதியாக அரசியலுக்கு வருவேன். சுமார் 31 ஆண்டுகளுக்கு முன்பு நான் தற்செயலாக அரசியல்வாதி ஆனேன். எனது தாத்தா, பண்டாரநாயக்காவின் செனட்டில் இருந்தார். எனக்கு கெஹலிய என்ற பெயரை பண்டாரநாயக்கவே வைத்தார். தீவிர அரசியலில் ஈடுபட எனக்கு விருப்பம் இல்லை. நான் ஒரு நல்ல வெற்றிகரமான வர்த்தகர்.

"அரசியலில் இருக்கிறேனோ இல்லையோ, எந்த நேரத்திலும் உதவி செய்ய காத்திருக்கிறேன். இது வெற்று வார்த்தைகளால் சொல்லப்பட்ட ஒன்றல்ல, இதயத்தில் இருந்து சொல்லப்பட்டது", என்றார். (ஐ)

## உள்நாட்டு...

அடிப்படையாகக் கொண்டு இந்த குழுக்களை அரசாங்கம் அமைக்கவுள்ளது.

உள்நாட்டு பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறலுக்கு தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ள அரச வட்டாரங்கள் பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவல்ல திறமையான நபர்கள் எங்களிடம் உள்ளனர் என்றும் கூறியுள்ளது.

இன்னமும் தீர்வு காணப்படாமல் உள்ள பொறுப்புக்கூறல் சம்பவங்களின் எண்ணிக்கையை அறிவதற்கான நடவடிக்கைகளை விசாரணை அதிகாரிகள் துரிதப்படுத்தியுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஈ.பி.டி.பி...

தேரர்கள் இருவரை அந்தக் கட்சி களமிறக்கியுள்ளது. தமிழ் கட்சி ஒன்று தேரர்களை தனது வேட்பாளர்களாக அறிவித்திருப்பது இதுவே முதல்தடவையாகும்.

கொழும்பை சேர்ந்த கிரிப்பன்னரே விஜித தேரர், உடவளவை ஜினசிறீ தேரர் ஆகியோரே இவ்வாறு ஈ. பி. டி. பியின் சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்குகின்றனர்.

இன நல்லிணக்கத்தை வெளிப்படுத்தவே தாம் ஈ. பி. டி. பி. கட்சியில் போட்டியிடுவதாக விஜித தேரர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (ஐ)

## வடக்கு...

என்பதனால் நாளை முதல் மறு அறிவித்தல் வரை மீனவர்கள் கட லுக்கு செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் காணப்படும் காற்று சுழற்சி இன்று (நேற்று) இரவு அல்லது இன்று காலை காற்றழுத்தத் தாழ்வு நிலையாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நாளை செவ்வாய்க்கிழமை ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையாக மாறி மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை அல்லது 18ஆம் திகதி அன்று தமிழ்நாட்டின் வட பகுதிக்கும் ஆந்திராவின் தெற்கு பகுதிக்கும் இடையில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக ( கடல் மேற்பரப்பு வெப்பநிலை 30 பாகை செல்சியஸ் இனை விட உயர்வாக இருப்பதாலும் மேடன் யூலியன் அலைவு சாதகமாக இருப்பதனாலும் இது ஒரு தீவிர தாழமுக்கமாகவே இருக்கும்.) கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் இன்று அதிகாலை முதல் கன மழை கிடைக்கத் தொடங்கும். இடையிடையே இது இடி, மின்னலோடு கூடிய மழையாக இருக்கும். இந்த மழை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும்.

இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோர பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 40 கிலோமீற்றரை விட அதிகமான வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள் நிலப்பகுதிகளில் காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாழமுக்கம் காரணமாக கடற் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் நாளை முதல் மறுஅறிவித்தல் வரை மீனவர்கள் கடலுக்கு செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது.

காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்பதனால் கிளைகள் முறிந்து அல்லது பாறி விழும் மரங்கள் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். குறிப்பாக வீதியோர மரங்கள் தொடர்பாக வீதியால் பயணிப்போர் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது.

இதேவேளை எதிர்வரும் 22ஆம் திகதி அன்றும் வங்காள விரிகுடாவில் மீண்டும் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது. (ஐ)

# முடிவு எடுக்கும் அதிகாரம் மாகாண பணிப்பாளர்களிடம்!

## கல்வி அமைச்சு வழங்கியது

கொழும்பு, ஒக். 14

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற வானிலையால் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுமாயின் முடிவுகளை எடுக்கும் அதிகாரங்கள் மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கு அளித்துள்ளதாக கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், வெள்ளம் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுமாயின், பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கும் அதிகாரம், மாகாண பிரதான செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண கல்வி பணிப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவுடன் கலந்துரையாடியதன் பின்னரே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)


# மழைக் காலநிலையால் நோய்கள் பரவும் அபாயம்!

கொழும்பு, ஒக். 14

நிலவும் மழையுடனான காலநிலையால் வயிற்றுப்போக்கு, காய்ச்சல், எலிக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக சுகாதார துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதனால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் முறையான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பது அத்தியாவசியமானது என் சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (ஐ)





யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 10 பாடசாலைகளிடையே வினாடி - வினா போட்டி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரா தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது...!

## 100,000...

இந்த இறப்புகளுக்கு மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய், நுரையீரல், பெருங்குடல் புற்றுநோய் என்பனவே காரணமாகும் என்று சுகாதார அமைச் சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆண்களிடையே வாய்ப் புற்றுநோய் அதிகரித்து வருகின்றது. நாட்டின் சனத்தொகையில் ஒரு இலட்சத்துக்கு ஆயிரத்து 990 பேர் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறைமையை ஊக்குவிப்பதன் மூலம் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## போலி...

விடுத்தார்.

மேலும், "முள்ளிவாய்க்கால் யுத்தத்துக்குப் பின்னரான தமிழ் அரசியல் போலித் தமிழ்த் தேசிய வாதிகளால் திசை திருப்பப்பட்டு வருகிறது. இவர்களால் தமிழ்த் தேசியத்தைச் சிங்கள தேசியத்துக்குள் கரைக்கும் நிகழ்ச்சி நிரல் திட்டமிட்டு மிகவும் நாசூக்காக முன்னெடுக்கப்படுகிறது.

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிராகரித்து சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கக் கோரியவர்கள் இவர்கள்தான். இன்னொருபுறம் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகளே மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்று விற்றுச் சம்பாத்தியம் செய்கிறார்கள்", என்றும் அவர் கூறினார். (ஐ-எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி பதவியை துறந்தார் ஹிருணிகா

கொழும்பு, ஒக்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுகிறார் என்று ஹிருணிகா பிரேமச்சந்திர அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும், கட்சியின் உறுப்புரிமையில் தான் நீடிப்பார் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் ஹிருணிகா கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 41 முன்னாள் எம். பிக்கள் நீர்கட்டணம் செலுத்தவில்லை!

கொழும்பு, ஒக். 14

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் 41 பேர் தமது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான நீர்க்கட்டணங்களை இன்னும் செலுத்தவில்லை என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு அறவிடப்படாது 90 இலட்சம் ரூபாய் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுவிதிகளுக்கு அமைய குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக எவ்வித விசேட சலுகைகளும் இன்றி சுற்றறிக்கைகளுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை குறிப்பிட்டுள்ளது.

## களுவாஞ்சிக்குடி விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஒக். 14

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 16 வயது சிறவன் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தார். இந்த விபத்தில் மேலும், ஒருவர் காயமடைந்துள்ளார்.


களுவாஞ்சிக்குடி - கல்முனை பிரதான வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில், கொக்கொட்டிச்சோலையை சேர்ந்த 16 வயது சிறுவனே உயிரிழந்தார். (ஐ)

## புத்தளத்தில் கனமழையால் 859 குடும்பங்கள் பாதிப்பு!

சிலாபம், ஒக். 14

புத்தளம் மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 859 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 196 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



முந்தல், மகாகும்புக்கடவலை, நாத்தாண்டி, தங்கொட்டுவை, வென்னப்புவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 45 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களே பாதிக்கப்பட்டுள்ளன.

முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 4 கிராம சேவகர் பிரிவுகளில் 56 குடும்பங்களை சேர்ந்த 207 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மகாகும்புக்கடவல பிரதேச செயலாளர் பிரிவில் 3 கிராம சேவகர் பிரிவுகளில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும் நாத்தாண்டி பிரதேச செயலாளர் பிரிவில் 25 கிராம சேவகர் பிரிவுகளில் 647 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 441 பேரும் தங்கொட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவுகளில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேரும் வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவில் 9 கிராம சேவகர் பிரிவுகளில் 125 குடும்பங்களைச் சேர்ந்த 468 பேரும் பாதிக்கப்பட் டுள்ளனர்.

### ஜனாதிபதித் தேர்தல்:

## வரவு - செலவு அறிக்கையை 20 வேட்பாளர்களே வழங்கினர்!

கொழும்பு, ஒக். 14

**ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் பிரசார வரவு - செலவு அறிக்கையை சமர்ப்பிக்கும் காலம் நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்தது. இதற்கமைய 20 வேட்பாளர்கள் மாத்திரமே இதுவரை வரவு - செலவு அறிக்கையை கையளித்துள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

தேர்தல் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகி 21 நாட்களுக்குள் பிரசார வரவு - செலவு அறிக்கையை கையளிக்க வேண்டும். பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, ஜனக ரத்நாயக்க உள்ளிட்ட 20 பேர் காலக்கெடுவுக்குள் அறிக்கையை கையளித்துள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளரை முன்மொழிந்த தரப்பு இந்த பிரசார வரவு - செலவு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். வரவு - செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நீதிமன்றத்தில் குறித்த வேட்பாளர்கள் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் அவர்கள் தமது வாக்குரிமை மற்றும் ஆசனத்தை இழக்க நேரிடும். குறித்த வேட்பாளர்களுக்கு எதிராக ஒரு இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்படுமென வும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## முன்னாள் தமிழ் எம். பியின் சகோதரர் வீட்டிலிருந்த அரச வாகனம் சிக்கியது

நுவரெலியா, ஒக். 14

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சு. சதாசிவத்தின் சகோதரரின் வீட்டில் மறைத்து வைத்திருந்த அரச வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது. நுவரெலியாவிலுள்ள அவரின் வீட்டிலேயே இந்த வாகனம் கைப்பற்றப்பட்டது.

அரசாங்கத்தால் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்ட வாகனங்கள் ஏதேனும் ஒரு இடத்தில் மோசடியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ மறைத்து வைக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் தகவல் அளிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நுவரெலியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில், குறித்த வாகனம் மீட்கப்பட்டு நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்வம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இணைய குற்ற மையங்களிலுள்ள இலங்கையரை மீட்க உதவுங்கள்!

### தாய்லாந்து தூதரிடம் பிரதமர் கோரிக்கை

கொழும்பு, ஒக். 14

மியன்மார் அரசாங்கம் மற்றும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு மூலம் மியன்மாரின் மியாவாடி பிராந்தியத்தில் இணைய குற்ற மையங்களில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக இலங்கையர்களை மீட்பதற்கு தாய்லாந்து அரசாங்கத்தின் உதவியை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கோரினார்.

தாய்லாந்து தூதுவர் பைட்டூன் மஹாபன்னபோர்ன் மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் பிரதமர் பணிமனையில் நடந்த கலந்துரையாடலிலேயே பிரதமர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இணைய குற்ற மையங்களில் இருந்து 28 இலங்கையர்களை மீட்பதற்கு தாய்லாந்து அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், இன்னும் மேற்படி மையங்களில் உள்ள 40 இலங்கையர்களை மீட்பதற்கு தொடர்ந்து ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தூதுவர் பைட்டூன் மஹாபன்னபோர்ன் இலங்கையின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு வாழ்த்துகளை தெரிவித்ததுடன், இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தவும்,



சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் விருப்பம் தெரிவித்தார்.

மேலும் நவீன விவசாய தொழில்நுட்பப் பயன்பாடு, ருஹுனு பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய பீடங்கள் இணைந்து அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மற்றும் உணவு பதப்படுத்துதல் போன்ற ஆராய்ச்சித் துறைகளுக்கான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ஐ)

## பொது வேட்பாளருக்கு பிரசாரம் செய்த இளைஞர் 4ஆம் மாடிக்கு!

கொழும்பு, ஒக். 14

தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக சமூக வலைதளங்களில் பிரசாரம் செய்தார் என்று கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கொழும்புக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து அந்த இளைஞன் சமூக வலைத்தள பிரசாரங்களை மேற்கொண்டுள்ளார். கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்களையும் வெளியிட்டார்.

அவரே கொழும்பு, 4ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். வெளிநாட்டிலிருந்து யார் பணம் வழங்கியது உள்ளிட்ட விவரங்களும் அவரிடம் கேட்கப்பட்டுள்ளன என்று அறிய வருகின்றது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 14.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org